வ.உ.சி.யும் சைவசமயமும்

செ. திவான்

வ.உ.சி.யும் சைவசமயமும்

வரலாற்றாசிரியர்
செ.திவான், எம்.ஏ., எம்.பில்.,

ரெகான் சுலைமான் பதிப்பகம்,
106 எப், 4 அ, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை.
தொலைபேசி : 0462-2572665

நூலாசிரியரின் வ.உ.சி. குறித்த 20வது நூல்

முதற்பதிப்பு	:	செப்டம்பர் 5, 2015 வ.உ.சி. பிறந்த தின வெளியீடு
விலை	:	ரூ.20/-
முகப்போவியம	:	முருகன், காசி கிராபிக்ஸ், பாளை.
கணிணி தட்டச்சு	:	ஜெ.பிரின்ஸ், மிக்ஸ்ட் மீடியா, பாளை. 98430 44622.

நன்றி

இந்நூலை வெளியிட உதவிய அய்யா
நீதியரசர் **ஜ.டேவிட் கிறிஸ்டின்** அவர்களுக்கு

காணிக்கை

பார் போற்றும்
தேசபக்தச் செம்மல் **வ.உ.சி.**
புகழ் பாடிய
புகழ் பாடும்
புகழ் பாடஇருக்கிற
பெரியோர்களுக்கு.........

செ.திவான்

வ.உ.சி.யும் சைவசமயமும்

உலகெல்லாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச்சிறப்பும் பெற்ற உத்தமத் தலைவர் வீரத்தலைவர் வ.உ.சி (1872 - 1936). வ.உ.சி.க்கு சைவ உலகில் இருந்த இடம் பெரிதும் அறியப்படாத ஒன்றாகும். 1935இல் சிவஞான போதத்திற்கு உரை எழுதி வெளியிட்டவர் வ.உ.சி. அதனை 2008இல் மறுபதிப்பு செய்து இலவசமாகவே வ.உ.சி. யின் திருமகனார் வ.உ.சி.வாலேஸ்வரனார் அவர்களைக் கொண்டு வெளியிட்டு வழங்கியவன் அடியேன்.

தமிழகமெங்கும் சைவ சபைகள் துவங்கப்பட்டது. சைவ சித்தாந்த சபை தூத்துக்குடியில் 25.08.1883இல் துவங்கப்பட்டது. 1885இல் திருச்சியில் சைவசித்தாந்த சபையும், திருவனந்தபுரத்தில் சைவப்பிரகாசசபையும் துவங்கப்பட்டது. பாளையங்கோட்டையிலும் சைவசபை 1886 இல் துவங்கப்பட்டது. 21.06.1897இல் "சித்தாந்த தீபிகை" எனும் திங்கள்இதழ் வெளிவந்தது. சைவ சபைகளின் ஒருங்கிணைப்பு மையமாகச் சைவ சித்தாந்த மகாசமாஜம் 07.07.1905இல் நிறுவப்பட்டது.

சென்னையில் திருவருட் பிரகாச சபையும், மெய்கண்ட சந்தான சபையும், நாகை - வெளிப்பாளையத்தில் சித்தாந்த சபையும், தஞ்சையில் சைவ சித்தாந்த சபையும் துவங்கப்பெற்றன.

அறிஞர்கள் குழுமம்

மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை, சூளை சோமசுந்தர நாயகர், வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் மறைமலையடிகள், கா.சு.பிள்ளை, எஸ்.பூர்ணலிங்கம் பிள்ளை என ஒரு பெரும் அறிஞர் குழுமம் தமிழகம் தழுவி எழுந்தது.

1872 இல் பிறந்த வ.உ.சி.யின் துவக்க கால வாழ்வு சைவ சமயத்தையே சார்ந்திருந்தது.

1900இல் தனது தந்தை உலகநாதபிள்ளையின் ஆணைக்கு இணங்க தூத்துக்குடிக்கு வழக்கறிஞர் தொழிலை நடத்திட குடிபெயர்ந்த வ.உ.சி., அங்கிருந்த சைவ சித்தாந்த சபையுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

வ.உ.சி. தன் சுயசரிதையில் அவரே சொல்கிறார்

"கைவல் லியப்படக் கருத்தொடு கற்றேன்
கைவல் லியமெனும் கருத்துயர் நூலும்
விசாரசா கரமும் வேறொரு சிலவும்,
விசாரம் புரிந்து மெய்ப்பொருள் கண்டு
துன்பமும் இன்பமும் துலையெனக் காணும்
நன்பதம் தெரிந்தேன்;"
"சைவ சித்தாந்த சபையினுட் புகுந்து
கைவரக் கொண்டேன் கருத்திணி துரைத்தலை"

(வ.உ.சி. சுயசரிதை, 2008- பக்கம் 35,36)

திருவள்ளுவரின் திருக்குறள் நீதிநூல்,
மெய்கண்டாரின் சிவஞான போதம்
சித்தாந்த நூல்
கைவல்யரின் கைவல்ய நவநீதம் வேதாந்த நூல்.

இவைகளைக் கற்றுணர்ந்த வ.உ.சி., சைவ சமயத்தில் ஈடுபாட்டுடன் செயல்படத் துவங்கினார்.

சைவச் சொற்பொழிவுகள்

1904 ஜூன் முதல் 1905 ஆகஸ்ட் மாதம் வரையில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் எட்டு சொற்பொழிவுகளை (அதாவது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை) வ.உ.சி. ஆற்றியிருக்கிறார்.

(தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 22-ஆம் வருட அறிக்கைப் பத்திரமும் நிபந்தனைகளும், 1905-மா.ரா.அரசு குறிப்பு.)

வாழ்த்துப்பாக்கள்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆண்டுக் கூட்டங்களில் சிறப்பு அழைப்பாளர்களை வரவேற்று வ.உ.சி. வாழ்த்துப் பாக்களும் பாடியுள்ளார்.

1905-இல், தூத்துக்குடியில் (திருமந்திரநகர்) சைவ சித்தாந்த சபையின் இருபத்தியிரண்டாவது வருட பூர்த்திக் கொண்டாட்ட மகாசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் போ.பாண்டித்துரை ஸாமித் தேவரவர்களை வாழ்த்தி வழுத்திய ஆசிரியப்பாவினை வ.உ.சி. பாடியுள்ளார்.

29ஆம் ஆண்டு நிறைவு விழாவில்

"சிவமிழைத்த நல்லணி பூண் செந்தமிழைக் கூடித்
தவமிழைத்துப் பெற்றெடுத்துத் தந்த - சிவமதத்தைப்
பண்டு கற்றுநின்ற அன்பர் பாடிய பன்னூல்களினின்று
கண்டு கற்று நிற்கும் அன்பர்காள்"

எனத் துவங்கி,

சைவ சித்தாந்த சபை வாழ்க நம்மருமைச்
சைவ சித்தாந்தத்தின் தாய் வாழ்க - வையத்
துயிரெல்லாம் வாழ்க உயர்ந்த சிவம் வாழ்க
பயிரெல்லாம் வாழ்க பணித்து

என்று நிறைவு செய்து, திருமந்திர நகர் சைவ சித்தாந்த சபையின் இருபத்தொன்பதாம் ஆண்டு நிறைவு மகோற்சவ மகாசபையினரது அக்கிராசனாதிபதியவர்களுடைய வரவு வாழ்த்துப் பாடலையும் வ.உ.சி. பாடியள்ளார்.

(செ.திவான், பதிப்பாசிரியர், வ.உ.சி. பாடல்கள், திருநெல்வேலி 1999, பக்கம் 32, 35)

29-ஆம் ஆண்டு நிறைவு விழாவில்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 29-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், தலைவர் டி.கே. சிதம்பரநாத முதலியாருக்கு வாழ்த்துப்பா வ.உ.சி. பாடியுள்ளார்.

சிவஞான போத உரைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்த வ.உ.சி.யின் முதற் சொற்பொழிவு தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையிலே தான் நிகழ்த்தப் பெற்றது.

மறைமலையடிகளுடன் தொடர்பு

இராமசாமி சொக்கநாத வேதாசலம்பிள்ளை என்ற மறைமலையடிகள் ஞானசாகரம் (அறிவுக்கடல்) என்னும் இதழினை கி.பி.1902-இல் துவங்கினார்.

கௌராபிமான சீலர்

ஞானசாகரம் என்னும் அறிவுக்கடல் சந்தாதார்களில் கப்பலோட்டிய தமிழராகிய வ.உ.சிதம்பரனாரும் ஒருவர் ஆவார்.

ஞானசாகரம் இதழின் இரண்டாம் தொகுதிக்கு (கி.பி.1904) பத்து ரூபாய் நன்கொடை செலுத்தி, அதன் ஒவ்வொரு இதழிலும்,

“கௌராபிமான சீலர்” என்ற பட்டியலில் வ.உ.சி.யின் பெயர் இடம் பெற்றிருக்கிறது.

தமிழ்க் கடல் மறைமலையடிகளுடன் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களுக்கு நல்ல தொடர்பு இருந்தது.

1905

1905 வைகாசித் திங்களில் மதுரைத் தமிழ்ச் சங்க விழாவுக்கு வந்த தூத்துக்குடி அன்பர்கள் மறைமலையடிகள் பேச்சைக் கேட்டு மகிழ்ந்து, அடிகளை 29.05.1905-இல் தூத்துக்குடிக்கு அழைத்து வந்தனர்.

வ.உ.சி.வீட்டில் இரவு உணவு

29.05.1905 இன்று வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களின் இல்லத்தில் சுவாமி வள்ளி நாயகம் பிள்ளை அவர்களுடன் இரவு உணவு உண்டோம் என்று மறைமலையடிகள் தனது நாட்குறிப்பில் குறித்துள்ளார்.

29.05.1905, 30.05.1905 ஆகிய இரு நாட்களும் மறைமலையடிகள் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் வீட்டில் விருந்தினராய் இருந்தார். 30.05.1905-இல் சைவ சிந்தாந்த சபையில், “ஞான சம்பந்தர்” எனும் தலைப்பில் பேசினார்கள். இந்தக் கூட்டங்களில் வ.உ.சி. கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

30.05.1905 பகல் உணவும், இரவு உணவும் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் வீட்டில் என்று மறைமலையடிகள் தனது நாட்குறிப்பில் குறித்துள்ளார்.

சைவ சித்தாந்த மகாசமாஜம்

மறைமலையடிகளின் சைவ சித்தாந்த மகாசமாஜத்திலும் வ.உ.சி. உறுப்பினராக இருந்தார். 1906-ஆம் ஆண்டில் ஒவ்வொரு நான்கு மாதத்திற்கும் வ.உ.சி. கையொப்பம் (சந்தா) செலுத்தியும் உள்ளார்.

இதன் பின்னர்தான், 1906 அக்டோபர் 16, சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி, 1908 கோரல் மில் வேலை நிறுத்தம், சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து, இந்திய தேசிய விடுதலைப் போராட்டங்கள், 1908 மார்ச் 12-ல் கைது, 1908 ஜூலை 07-ல் இரட்டை ஆயுள் தண்டனை, கோவைச் சிறைவாசம், கண்ணனூர் சிறைவாசம், 24.12.1912-இல் விடுதலை, 1919 வரை சென்னை வாழ்க்கை, 1922 வரை கோவை வாழ்க்கை, 1932-இல்

திரும்பவும் தூத்துக்குடி வாழ்க்கை, 1936 நவம்பர் 18 இரவு 11.30 மணியளவில் பூதவுடல் நீந்துப் புகழுடம்பு எய்தியது என வ.உ.சி. வரலாறாகிறார்.

சிறை வாழ்க்கைக்குப்பின்

சிறை வாழ்க்கைக்குப்பின், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.-வுடன் தொடர்பு ஏற்பட்டது. வ.உ.சி., சொ.முருகப்பா,

பொ. திரிகூடசுந்தரம்பிள்ளை, கே.எம்.பாலசுப்ரமணிய முதலியார், போன்ற சீர்திருத்த சைவர்கள் தமிழகத்தில் செயல்பட்டனர்.

சிவஞான போதம் ஆறாம் சூத்திர ஆராய்ச்சி எனும் வ.உ.சி.-யின் கட்டுரை 06.12.1935 தினமணி நாளிதழில் வருஷ அனுபந்தத்தில் வெளிவந்தது.

குறுக்குச்சாலையில் அரங்கேற்றம்

தூத்துக்குடி - எட்டயபுரம் நெடுஞ்சாலையில் உள்ள குறுக்குச்சாலையில், அ.செ.சு.தர்மச்சத்திரத்தில், மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடாலயத்தின் அதிபராகிய ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளுடைய தலைமையில் வ.உ.சி.யின் “சிவஞானபோத உரை” அரங்கேற்றம் செய்யப்பட்டது. பின்னர், வ.உ.சி. அவ்உரையினைச் செப்பனிட்டு, 1935-இல் நூல் உருவில் வெளியிட்டு மகிழ்ந்தார்.

சைவ சமயமும் சைவ சித்தாந்தமும்

சிவ வழிபாடு மிகவும் தொன்மையானது. மொகஞ்சதரோ, அரப்பா ஆகிய சிந்து நாகரிங்களிலேயே சிவ வழிபாடு இருந்தது என்பதை அறிஞர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். இந்தியப் பெருநாட்டில் நேபாளத்தில் லகுலீசபாசுபதம், காசுமீரத்தில் பிரத்திய பிஞ்ஞை, மராட்டியத்தில் வழக்கில் உள்ள சிவதரிசனம், நாதசம்பிரதாயம், கர்நாடகத்தில் வீரசைவம், நீலகண்ட சிவாச்சாரியாரின் சிவாத்துவித சைவம், தமிழ்நாட்டில் சித்தாந்த சைவம் - இவ்வாறு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சிவவழிபாட்டின் பரப்பைக் காணமுடியும்.

ஒருவனே ஆகிய இறைவன், எண்ணிலியாகிய உயிரகள், இறைவனிடத்து நெருங்க முடியாத அதாவது அவனைப் பற்ற இயலாத மலம் எனப்படும் அழுக்கு ஆகிய மூன்று பொருள்களும் தோற்றமில் காலந்தொட்டே உள்ளன. இவற்றுக்குத் தோற்றம் இல்லை ஆதலால் இவற்றுக்கு அழிவும் இல்லை. மலம் என்பதை ஆணவம் என்றும் அழைப்பர். ஆணவம் என்பது



சைவ சமய நேயர்களுடன் வ.உ.சி. கைகூப்பிய நிலையில்

செருக்கு என்ற பொருளைத் தராது. அது உயிரின் அறிவை மறைத்துக் கீழான இன்பங்களில் ஈடுபடச் செய்து உயிரை அணுத்தன்மைப்படுத்துகிறது. இப்படி ஆணவ மலக் கட்டினால் இருட்டறைக்குள் தவிக்கும் எண்ணற்ற உயிரகளுக்கு அறிவூட்டி உயர்வடையச் செய்யும் பொருட்டு இறைவன் அவ்வுயிரகளுக்கு உடம்பு, அறிவுப்பொறிகள், செயற்பொறிகள், வாழ்வதற்கு ஏற்ற ஓர் உலகம், அவ்வுலகத்தில் துய்ப்பதற்கேற்ற பொருள்கள் ஆகியவற்றைத் தன் பெருங்கருணையினால் படைத்தளிக்கிறான். இதனால் சிறிது சிறிதாக அறிவு வளர்ச்சி பெற்ற உயிரகள் தம் செயல்களுக்கேற்ற பயன்களை நுகர்ந்து, சீலம் (சரியை), நோன்பு (கிரியை), செறிவு (யோகம்), அறிவு (ஞானம்) ஆகியவற்றை அடைந்து பக்குவப்படும். அவ்வாறு பக்குவப்பட்ட உயிரகளை இறைவன் ஆட்கொண்டருளுவான். அவை அவனுடைய திருவடி நிழலை அடைந்து, தம் தனித்தன்மையை இழக்காமல் என்றும் மாறாத இன்பத்தை நுகர்ந்தபடி இருக்கும். இவ்வாறு கூறப்படுகின்ற கருத்துக்களுக்கு எல்லாம் சைவ சித்தாந்தத்தில் தடைகள் எழுப்பி விடைகள் தரப்படுகின்றன. இதனால் தான் முடிந்த முடிவு என்ற பொருள்தரும் சித்தாந்தம் என்று இத்தத்துவமரபு அழைக்கப்படுகிறது'' - என்பர் சைவ சித்தாந்தப் பேரறிஞர் அண்ணன் சி.சு.மணி அவர்கள்.

1925-லும் 1926-லும் நீதிக் கட்சி மாநாடுகளில் வ.உ.சி. கலந்து கொண்டார். 1927-இல், வ.உ.சி.-யின் தலைமையில் தந்தை பெரியார் உரையாற்றினார். (26.06.1927 குடியரசு) (இது குறித்து மேலும் விபரங்களை அறிய செ.திவான் எழுதிய வ.உ.சி.யும் பெரியாரும் என்ற நூலில் அறியலாம்).

1929 மார்ச் 29, 30, 31 நாட்களில் சைவப்பெரியார் தனிக்கூட்டம் நடைபெற்றது. வ.உ.சி. அதில் கலந்துகொண்டார். 07.04.1929 குடியரசு இதழில் விஷயாலோசனைக் கமிட்டியில் திருவாளர் வி.ஓ.சிதம்பரம்பிள்ளை கூட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை என்னும் செய்தியும் காணப்படுகிறது.

திருப்பாதிரிப்புலியூர் சைவ மாநாடு, 1929 மே 16-ம் நாள் துவங்கி 6 நாட்கள் நடைபெற்றது. இந்த மாநாட்டில், வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு இடமளிக்க மறுத்துவிட்டது. (02.06.1929 குடியரசு)

இவ்வளவு நிலைமைக்குப் பிறகும், வ.உ.சி. தனது சைவ சித்தாந்தக் கொள்கையில் உறுதியோடு இருந்தார்.

திருவனந்தபுரத்தில் இருந்து பண்டித முத்துசாமிப் பிள்ளை வெளியிட்ட (1915 வைகாசி) தமிழன் இதழில் "சச்சிதாநந்தம்" எனும் கட்டுரையை வெளியிட்டார். 24.12.1933-இல் வெளியான சித்தாந்தப் பொன்மலர், தூத்துக்குடி சைவ சித்தாந்த வெளியீட்டில் வ.உ.சி.யின் சச்சிதாநந்தம் எனும் கட்டுரை 117, 118, 119 பக்ககங்களில் வெளிவந்துள்ளது. அக்கட்டுரையில் சிறு திருத்தங்களுடனும், மீண்டும் சேர்க்கப்பட்ட வரிகளுடனும், நண்பர் ஆ.இரா.வேங்கடாசலபதி, தனது "வ.உ.சி.யின் சிவஞான போத உரை" நூலில் வெளியிட்டுள்ளார். இங்கே, சித்தாந்தப் பொன்மலரில் வ.உ.சி. எழுதிய கட்டுரையை எதையும் மாற்றிடாமல் அப்படியே தருகிறோம்.

சச்சிதாநந்தம்

வ.உ.சிதம்பரம் பிள்ளை

சில உபநிடதங்களும் ஆகமங்களும் கடவுளுக்கு இலக்கணம் கூறுமிடத்து "சச்சிதாநந்தம்" என்று கூறுகின்றன. இவ்வுபநிடத ஆசிரியர்களும் ஆகம ஆசிரியர்களும் சுருதி, யுக்தி, அநுபவம் நிறைந்தவர்களென்றே நாம் கொள்ளுதல் தகுதி. அவ்வாறு நாம் கொள்ளின் அவர்கள் கடவுளுக்குக் கூறியுள்ள சத், சித், ஆனந்தம் என்னும் இலக்கணங்கள் மனிதர்கள் சுருதி, யுக்தி, அநுபவங்களாற் கடவுளுக்குக் கூறக்கூடிய சகல இலக்கணங்களையும் உட்கொண்டும், மனிதர் சுருதி, யுக்தி, அநுபவங்களால் மறுக்கக்கூடிய எவ்வித இலக்கணத்தையும் உட்கொள்ளாதும் நிற்கவேண்டும்.

நான்கு மகா வேதவாக்கியங்களில் ஒன்று, "பிரஹ்மம் பிரஜ்ஞானம்" என்கின்றது. 'பிரஹ்மம்' கடவுள் எனவும், 'பிரஜ்ஞானம்' அறிவு எனவும் பொருள்படும். இம்மகா வாக்கியம் தோன்றியதற்கு நீண்ட காலத்திற்குப் பின்னரே கடவுளுக்குச் "சச்சிதாநந்தம்" என்னும் இலக்கணம் கூறப்பட்டிருத்தல்வேண்டும். வேதங்கள் 'பிரஹ்மம்' என்பது அறிவு, அஃதாவது சித்து, என்று கூறி நிற்கவும், அதற்குப் பின்னர்த் தோன்றிய உபநிடதம் முதலியவை சத், ஆனந்தம் என்பவற்றை முறையே 'சித்' என்பதற்கு முன்னும் பின்னும் சேர்த்துக் கூறியதற்குக் காரணம் 'சித்' என்னும் பதம் கடவுளது பூரண இலக்கணங்களையும் விளக்கத்தக்கதாயில்லையென்று அவ்வுபநிடதம் முதலியவற்றின் ஆசிரியர்கள் கருதியதே என்று நாம் கொள்ளுதல் மிகையாகாது.

உபநிடத ஆகம உரையாசிரியர்களுள் பலர் 'சத்' என்பதற்கு நித்தியம் எனவும், 'சித்' என்பதற்கு அறிவு எனவும், 'ஆனந்தம்' என்பதற்குச் சுகம் எனவும் பொருளுரைத்திருக்கின்றனர். இவர் உரைத்த பொருள்களே சரியான பொருள்களென்று இவருக்குப் பிற்பட்ட பலரும் கொண்டனர். ஆயினும், இவரில் ஒரு சிலர் "அகண்ட பரிபூரணம்" என்பதைச் 'சச்சிதாநந்தம்' என்பதன் முன்னர்ச் சேர்த்துக் கடவுளை "அகண்ட பரிபூரண சச்சிதாநந்தம்" என்று கூறினர். சத், சித், ஆனந்தம் என்பன கடவுளது முழு இலக்கணத்தையும் விளக்கி நிற்கவில்லையென்று இவர் கருதியதே அவற்றின் முன்னர் அகண்ட பரிபூரணம் என்பதைச் சேர்த்ததற்குக் காரணமாயிருத்தல் வேண்டும்.

இவ்வான்றோர் "சச்சிதாநந்தம்" என்பதற்குக் கொண்ட பொருள் "நித்தியத் தனமையும் சுகத் தன்மையும் பொருந்திய அறிவு" என்பதே. இப்பொருளைக் கொள்ளும் எவரும் "சச்சிதாநந்தம்" என்பது "சர்வ வியாபகம்" என்னும் கடவுளிலக்கணத்தைக் கொண்டு நிற்கவில்லையென்று கருதாதிரார். இவ்விலக்கணக் குறைவை நிவிர்த்திக்கவே "அகண்ட பரிபூரண" என்பது "சச்சிதாநந்தம்" என்பதற்கு முன்னர்ச் சேர்க்கப்பட்டதென்றறிக. ஆன்றோரிற் சிலர் நித்ய வஸ்து (என்றுமுள்ளது) வியாபக வஸ்தாக (எங்குமுள்ளதாக)வேயிருக்குமென்று விவகரித்துச் 'சத்திதாநந்தம்' என்பது கடவுளது சர்வ வியாபக இலக்கணத்தையும் விளக்கி நிற்கிறதென்று கூறுகின்றனர். 'என்றுமுள்ளது' 'எங்குமுள்ளது' என்று விவகரித்தல் பிழை. நித்தியத்திற்கும் வியாபகத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யாகலான்.

உதாரணமாக, வாயுவை எடுத்துக்கொள்வோம். அது நித்திய பொருளென்பது வெள்ளிடை மலை. அஃதில்லாமல் உலகம் இல்லையாகலான். அவ்வாறே, வாயு சர்வ வியாபகப் பொருளன்றென்பதும் வெள்ளிடைமலை. அது வைரம் முதலிய கடினப் பொருள்களுள் இல்லையாகலின். உலகப் பொருள்களிலிருந்து எடுத்துக் காட்டப்படும் உதாரணங்களெல்லாம் "உலகம் மித்தை" என்னும் கொள்கையாலும், "சத் என்பது நித்திய பொருளைக் குறிப்பதன்றிச் 'சர்வ வியாபகப் பொருளைக் குறிக்க மாட்டா"தென்பது "நித்தியமாயுள்ள பிரஹ்மம் சர்வ வியாபகப் பொருளாயு மிருக்கின்றது" என்னும் உண்மையாலும் மறுக்கப்பட்டுப் போனதாகக் கூறுகின்றனர் சிலர். மேற்சொல்லிய உதாரணமும் பத அர்த்தமும் மேற்சொல்லிய கொள்கையாலும் உண்மையாலும் மறுக்கப்பட்டுப் போனதாகக் கருதுகின்ற



சைவ சமய அன்பர்களுடன் : கீழே, இடப்புறத்திலிருந்து ஐந்தாவதாக அமர்ந்திருப்பவர் வ.உ.சி. இருக்கையில் இடது ஓரத்தில் அமர்ந்திருப்பவர் அ.செ.சு.கந்தசாமி ரெட்டியார்.

மக்களை நோக்கி இவ்வியாஸம் எழுதப்படவில்லையென்று அவர்கள் அறிவார்களாக.

நமது முன்னோர் தமது முன்னோர் கூறியவற்றைச் சரியென்றே கொள்ளும் சுபாவத்தைக் கொண்டிருந்தா ரென்பதும், தமது முன்னோர் கூறியவை சரியானவையா பிசகானவையா என்று விசாரிக்கும் சுபாவத்தைக் கொண்டிருக்கவில்லை யென்பதும் நம்மில் ஒரு சிலர் அறிந்தவையே. நமது முன்னோர் கூறியுள்ளவற்றில் ஒன்று சரியானதா பிசகானதா என்று நம்மில் ஒருவர் விசாரிக்கப்புகின், அவரைப் புரட்சிக்காரரென்றும் ஆன்றோரை நிந்திப்பவரென்றும், ஆன்றோரினும் அறிவுடையவ ரென்ற பெயரைக் கொள்ளக் கருதுபவரென்றும் பலவாறாக நிந்திக்கின்றனர் நம்மிற் பலர். அப்பலரையும் தாமே முற்றுணர்ந்தவரென்று தருக்கித் திரிகின்ற சிலரையும் கருதிய தன்று; முழுநடுவு நிலைமையோடும் யுக்தியோடும் மெய்ப்பொருளை ஆராய்வாரையே கருதியது இனி இங்குக் கூறப்படுவது.

'சத் சித்' என்னும் இரண்டு பதங்களுக்கும் நமது முன்னோர் உரைத்துள்ள பொருள்கள் எனக்கு உடன்பாடானவையே. ஆனந்தம் என்பதற்கு நமது முன்னோர் உரைத்துள்ள பொருளே எனக்கு உடன்பாடற்றது. சுகமும் அதற்கு மறுதலையாய துக்கமும் மனத்தின் அநுபவங்களே யென்பது யாவருக்கும் நேரில் தெரிந்த தொன்று. கடவுள் மனதிற்கு அப்பாற்பட்ட பொருளென்பது அறிஞர் பலர்க்கும் ஒப்பமுடிந்த ஒரு முடிவு. அம்முடிவைக் கொண்டும் மனத்தின் அனுபவமாகிய சுகத்தை மனத்தைக் கடந்து நிற்கும் கடவுளது வடிவமாகவோ இலக்கணமாகவோ கூறுதல் இழுக்கினுள்ளெல்லாம் பெரிய இழுக்கு.

சில சுருதிகள் "பிரஹ்மம் சுகமன்று" எனக் கூறுகின்றனவென றறிக. சுருதிகள் ஒன்றற்கொன்று மாறாக ஒரு பொருளைக் கூறுமிடத்துச் சுருதிப் பிரமாணத்தை எடுத்துக் கூறாது விடுதலே முறைமை. ஒரு கணமேனும் தான்தானாக நின்றவர் சுகமும் துக்கமுமற்ற நிலையே தனது நிலை. அஃதாவது ஆத்ம நிலை, அஃதாவது பிரஹ்ம நிலை என்று அறிவர். தான்தானாக நின்றறியாதார் அந்நிலையில் நிற்றற்குப் பயிலுவதே முறைமை; மற்றையோர்பால் அந்நிலையைப் பற்றி வினவப் புகுதல் முறைமையன்று. அம்மற்றையோர் தான் தானாக நின்றவரோ என்பதைப் பிறர் அறிய முடியாதாகலான். இனி, நடுவு நிலைமையோடு நின்று ஆராயும் யாவர்க்கும் பொதுவாய யுக்தி கொண்டே "பிரஹ்மம் சுகம்" என்பது சரியா, பிழையா என்று

விசாரித்தல் வேண்டும். அவ்யுக்தியின் விசாரணையில் மனத்தின் ஒர் அநுபவமாகிய சுகத்தைக் கடவுளுக்கு இலக்கணமாகக் கூறுதல் இழுக்கென்று முன்னரே கண்டோம்.

'ஆனந்தம்' என்பதற்குச் 'சுகம்' என்னும் பொருளைக் கூறுங்காலையில், "சச்சிதாநந்தம்" என்பது கடவுளின் சர்வ வியாபக இலக்கணத்தை விளக்கி நிற்கின்றதென்று சொல்லமுடியாது, சத் என்பது நித்யத்துவத்தையே காட்டும் பதமாகலான்: கடவுளைச் "சச்சிதாநந்தம்" என்று கூறிய ஆன்றோர் அத்தொடர் மொழிக்குப் பொருளுரைத்த ஆன்றோரினும் பெரியவரென்றே நாம் கொள்ளல்வேண்டும். அப்பெரியோர் கடவுளுக்கு இனறியமையாத சர்வ வியாபக இலக்கணத்தை விட்டிருக்க மாட்டாரென்று நாம் நினைத்து "ஆனந்தம்" என்பதற்கு வேறு பொருளுண்டாவென்று விசாரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இங்கு விசாரிக்கப்படுவது 'ஆனந்தம்' என்னும் பதத்தின் அர்த்தமே யன்றி, பிரஹ்மத்தின் சர்வ வியாபக இலக்கணமன்றென்பதையும், சத்தாயுள்ள பிரஹ்மம் சர்வ வியாபக இலக்கணமன்றென்பதையும், சத்ததாயுள்ள பிரஹ்மம் சர்வவியாபகமாயிருத்ததால் 'சத்' என்னும் பதம் சர்வவியாபகப் பொருளையும் குறித்து நிற்கின்ற தென்றல் பொருந்தா தென்றும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

"சச்சிதானந்தம்" என்பது ஆன்றோருரைப்படி கடவுளது சர்வவியாபக இலக்கணத்தைத் தாங்கி நிற்கவில்லையே யென்று வினவுவார்க்குச் சமாதானமாக "ஆனந்தம்" என்பது (ஆ = எங்கும், நந்தம் = சுகம்) "எங்கும் நிறைந்தசுகம்" எனப்பொருள்படுமென்று சிலர் கூறுகின்றனர். 'நந்தம்' என்பதற்குச் 'சுகம்' என்னும் குணப்பெயர்ப் பொருளில்லையென்றும், சுகித்தல் என்னும் தொழிற் பெயர்ப் பொருளே உண்டென்றும், அப்பொருளைக் கொள்ளுங்கால் "கடவுள் சுகிக்கின்றவர்" என்று ஒப்புக் கொள்ள நேரிடுமென்றும், அவ்வாறு ஒப்புக் கொள்ளின் "கடவுள் செயலற்றவர் என்னும் கோட்பாட்டிற்குக் கேடு நேரிடுமென்றும் அவர் அறிவாராக. அன்றியும், 'சித்' என்பதற்குப் பின்னுள்ள 'நந்தம்' எங்கும் நிறைந்ததென்றால், அதற்கு முன்னுள்ள 'சித்' எங்கும் நிறையாத தென்று கூற நேரிடுமென்றும் அவர் அறியக்கடவர்.

இனி, "ஆனந்தம்" என்பதற்கு யான் கூறுகிற பொருள் "எங்கும் நிறைந்திருத்தல்" என்பதாம் 'ஆ' என்பது 'எங்கும்' என்று பொருள் படுமென்று மேலே கூறப்பட்டுள்ளது. 'நந்தம்' என்பது 'நத்' என்னும் தாதுவினின்று வந்தது. 'நத்' என்னும்

தாதுவுக்கு இரண்டு பொருள்களுண்டு. ஒன்று 'சந்தோஷி' என்பது; மற்றொன்று 'நிறைந்திருக்க' என்பது. முந்திய பொருளைக் கொள்ளாது பிந்திய பொருளைக்கொள்ளின், "ஆனந்தம்" என்பது "எங்கும் நிறைந்திருத்தல்," அஃதாவது "சர்வ வியாபகம்" என்று பொருள்படும். அப்போது "சச்சிதாநந்தம்" என்பது "நித்தியமாகவும் சர்வ வியாபகமாகவும் நிற்கின்ற அறிவு" என்னும் பொருளைத் தரும். அப்பொருளைக் கொள்ளுங்காலையில் மனத்தின் பல அநுபவங்களில் ஒன்றாகிய சுகத்தைக் கடவுளுக்கு இலக்கணமாகக் கூறி இழுக்கப்படுதலும் கடவுளுக்கு இன்றியமையாத சர்வ வியாபக இலக்கணத்தை "சச்சிதாநந்தம்" என்பது கொண்டு நிற்கவில்லை யென்னும் கூற்றுக்குட்பட்டு இடர்ப்படுதலும் நீங்கி ஒழியும்.

உண்மையில் சமயங்களெல்லாம் ஒன்றே

– *வ.உ.சி.*

இவ்வுலகத்தின்கண் தோன்றி நிலவுகின்ற சமயங்கள் பல. அவற்றுள், கடவுள் இல்லையென்று சொல்லும் சமயம் ஒன்று. அதனை நாஸ்திக சமயம் என்பர் ஆன்றோர். மற்றைய சமயங்களெல்லாம் கடவுள் உண்டென்று சொல்பவைகளே. அவற்றை ஆஸ்திக சமயம் என்பர் ஆன்றோர். இவற்றுள், நாஸ்திக சமயத்தினை அனுசரிப்பவர் நாஸ்திக சமயத்தினர், அல்லது நாஸ்திக மதத்தினர் என்றும், ஆஸ்திக சமயத்தினை அனுசரிப்பவர் ஆஸ்திக சமயத்தினர் அல்லது ஆஸ்திக மதத்தினர் என்றும் சொல்லப்படுகின்றனர்.

இவருள், நாஸ்திக மதத்தினர் அண்டங்களின் அமைப்பும், அண்டங்கள் ஒன்றையொன்று ஒழுங்காகச் சுற்றி வருதலும், ஒவ்வோர் அண்டத்திலும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஒழுங்காக நிகழ்ந்து வருதலும் இயற்கையின் சக்தியால் என்று சொல்லுகின்றனர். ஆஸ்திக மதத்தினர்களோ அண்டங்களின் அமைப்பும், அண்டங்கள் ஒன்றையொன்று ஒழுங்காகச் சுற்றி வருதலும், ஒவ்வோர் அண்டத்திலும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஒழுங்காக நிகழ்ந்து வருதலும் கடவுள் சக்தியால் என்று சொல்லுகின்றனர். இவ்விரு திறத்தாருள்ளும் நிலவுகின்ற வேற்றுமை பெயரளவிலேயல்லாமல் பொருளளவில் இல்லை. ஒரு திறத்தார் இவ்வுலகத்தின் காரியங்களெல்லாம் இயற்கையால்

நிகழ்கின்றன என்று கூறுகின்றனர். மற்றொரு திறத்தினர்கள் இவ்வுலகத்தின் காரியங்களெல்லாம் கடவுளால் நிகழ்கின்றன என்று கூறுகின்றார்கள். நாஸ்திகரது இயற்கையைத்தான் ஆஸ்திகர் கடவுளென்று கூறுகின்றனரென்று நாஸ்திகரும், ஆஸ்திகரது கடவுளைத்தான் நாஸ்திகர் இயற்கையென்று கூறுகின்றனரென்று ஆஸ்திகரும் கொள்வரேல், இவ்விரு திறத்தாருள்ளும் வேற்றுமையில்ல. ஆகவே, நாஸ்திகருள்ளும் ஆஸ்திகருள்ளும் சமய வேற்றுமை பெயரளவிலே உண்டேயன்றி உண்மையில் இல்லை. வெறும் பெயருக்காகச் சண்டை இடும் காலம் இஃது அன்று. ஆதலால், நாஸ்திக சமயத்தினரும் ஆஸ்திக சமயத்தினர்களும் தங்களுக்குள் உண்மையில் வேறுமையில்லை யென்றும், பெயரளவில் தோன்றும் வேற்றுமையை வேற்றுமையையாகக் கருதலாகா தென்றும் கொண்டு சினேகப் பான்மையுடன் வாழ்ந்துவரக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இனி, நாஸ்திக மதத்திற்கும் ஆஸ்திக மதத்திற்குமே உண்மையில் வேற்றுமையில்லையென்றால், ஆஸ்திக மதங்களுள் உண்மையில் வேற்றுமை இல்லையென்பதை யான் எடுத்துக்கூற வேண்டுவதில்லை. ஆயினும், கடவுளைப் பற்றியோ, அல்லது கடவுள் உண்டென்று கொள்ளும் பலவகை மதங்களைப் பற்றியோ நடுவுநிலைமையோடு நின்று உண்மையாராயச்சி செய்யாதிருக்கும் என்று ஆஸ்திக சகோதரர்களுக்குச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

இவ்வுலகத்திலுள்ள ஆஸ்திக சமயத்தார்களெல்லாம் தத்தம் சமயக் கடவுள் சர்வ சக்தியும், சர்வ ஞானமும், சர்வ வியாபகமும் உள்ளவரென்று ஒப்புக் கொள்கின்றனர். அவ்வாறு ஒப்புக் கொணடும், ஒவ்வோர் ஆஸ்திக சமயத்தினரும், தத்தம் சமயமே மெய்யான அல்லது உயர்ந்த சமயமென்றும், தத்தம் சமயக் கடவுளே மெய்யான அல்லது உயர்ந்த கடவுளென்றும், மற்றைய சமயங்களெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்த சமயமென்றும், மற்றைய சமயக் கடவுளெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்த கடவுளென்றும் கூறி வேறுபடுகின்றனர்.

சர்வ சக்தியும், சர்வ ஞானமும், சர்வ வியாபகமும் உள்ள பொருள் ஒன்றுதான் இருக்க முடியுமேயன்றி, ஒன்றற்குமேல் இருக்கமுடியாதென்பது அறிவுடைய ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மை. ஆகவே, ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் சமயக் கடவுளே மெய்யான அல்லது உயர்ந்த கடவுளென்றும், மற்றைய சமயக் கடவுளெல்லாம்



வ.உ.சி. யின் சிவஞான போத உரை அரங்கேறிய இடம்
(குறுக்குச்சாலை)



வ.உ.யின் சிவஞான போத உரை அரங்கேறிய இடத்தின் உள்தோற்றம்

பொய்யான அல்லது தாழ்ந்த கடவுளென்றும் கூறுவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கும்போது, ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் சமயக் கடவுளுடைய பெயரும் வடிவும் மற்றைய சமயக் கடவுளுடைய பெயரோடும் வடிவோடும் வேறுபட்டிருக்கக் காண்டலேதான் காரணம் என்று தெரிகின்றன.

பெயரும், வடிவும், நாம் நமது பொறிகளால் நமது காட்சியில் காணும் கல், மண் போன்ற பொருள்களும் அல்ல; நமது உணர்ச்சியால் காணும் வலி (சக்தி), அறிவு (சித்து) போன்ற பொருள்களும் அல்ல. பெயரும் வடிவும் ஒவ்வொரு சமயத்தையும் கண்டுபிடித்த ஆசிரியர்களாலும், அவர்களைப் பின்பற்றியோர்களாலும் அவரவர் உள்ளத்திற்கும் செவிகளுக்கும் கண்களுக்கும் இயைந்தவாறு கற்பிக்கப்பட்டவைகளே. இப்பெயர்களும் வடிவுகளும் நம்மாலும் கற்பிக்கப்படத்தக்கவையே. இக்கற்பிதமான பெயர்களையும், வடிவுகளையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், ஒவ்வொரு சமயக் கடவுளிடத்தும் அவரவர் கொள்கைப்படி உள்ளது சர்வ சக்தியும், சர்வ ஞானமும், சர்வ வியாபகமுமாகிய ஒன்றே.

ஒவ்வொருவனுக்கும் தன்தன் மகனிடத்தில் அதிகப் பிரியம் உண்டு. ஒருவன் தன் மகனை "மகனே" என்று அழைத்து, அவனுக்கு வெள்ளை வேஷ்டி கட்டி அவன் நெற்றியில் சந்தனப் பொட்டிட்டு அவனைப் பேணுகிறான். அவன் வீட்டிற்குக் கீழ வீட்டுக்காரன் முந்தியவனுடைய மகனையே "மைந்தனே" என்று அழைத்து, அவனுச் சிவப்புப்பட்டுக் கட்டி அவன் நெற்றியில் குங்குமப் பொட்டிட்டுப் பேணுகிறான். அவன் வீட்டிற்குக் கீழ வீட்டுக்காரன் முந்தியவனுடைய மகனையே "மைந்தனே" என்று அழைத்து, அவனுக்குச் சிவப்புப்பட்டுக்கட்டி அவன் நெற்றியில் குங்குமப் பொட்டிட்டுப் பேணுகிறான். அவன் வீட்டிற்கு மேல வீட்டுக்காரன் முந்தியவனுடைய மகனையே "குழந்தாய்" என்று அழைத்து, அவனுக்குச் சட்டை போட்டு அவன் நெற்றியில் சாந்துப் பொட்டிட்டுப் பேணுகிறான். முந்தியவன் தன் மகனைத் தான் அழைத்த "மகனே" என்ற பெயரால் அல்லாமல் தன் பக்கத்து வீட்டுக்காரர் என்னை "மைந்தனே", "குழந்தாய்" என்ற பெயர்களால் அழைத்ததற்காகவாவது, தன் மகனுக்குத் தான் கட்டிய வெள்ளை வேஷ்டியும் தான் இட்ட சந்தனப் பொட்டும் அல்லாமல் தன் வீட்டிற்குக் கீழ வீட்டுக்காரன் சிவப்புப் பட்டுடுத்தியும் சந்தனப் பொட்டிட்டும், தன் வீட்டிற்கு மேல வீட்டுக்காரன் சட்டை போட்டும் சாந்துப் பொட்டிட்டும்

அழகுபடுத்தியதற்காகவாவது துன்பம் அடைவானா? அவன் துன்பம் அடைய மாட்டான். அதற்கு மாறாக, தன் பக்கத்து வீட்டுக்காரர் தன் மகன் மீது கொண்டுள்ள அன்பு காரணமாக அவருக்குப் பிரியமான பெயர்களை இட்டழைத்ததற்காகவும் அவருக்குப் பிரியமானபடி அலங்காரம் செய்து பேணியதற்காகவும் அவன் அவ்விருவரையும் மிக நேசிப்பான்.

மேற்கண்டபடியே, தம் கடவுளுக்கு ஒரு சமயத்தார் தம் பிரியப்படி ஏற்படுத்தியுள்ள பெயரையும் வடிவையும் விடுத்து, அக்கடவுளுக்கே வேறு சமயத்தார்கள் தங்களுக்குப் பிரியமான வேறு பெயர்களையும் வடிவுகளையும் ஏற்படுத்தி வணங்குகின்றார்கள் என்று கொள்ளின், முந்திய சமயத்தார் பிந்திய சமயத்தார்களிடத்து வேற்றுமை காட்டாது அன்பு பாராட்டுவர். இவ்வாறே, ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கடவுளையே மற்றைய சமயத்தினர்கள் அவரவர்களுக்குப் பிரியமான பெயர்களாலும் வடிவுகளாலும் வணங்குகின்றார்கள் என்று கொள்ளல் வேண்டும். அவ்வாறு கொள்ளுங்கால், பல சமயத்தார்களும் ஒரே கடவுளையே அவரவர்களுக்கு இஷ்டமான பெயர்களாலும் வடிவுகளாலும் வணங்குகின்றார்கள் என்றும், அவர்கள் சமயக் கடவுளும் சமயமும், அவரவர்களால் கற்பிக்கப்பட்ட பெயரளவாலும் வடிவளவாலும் வெவ்வேறாகத் தோன்றுதலின்றி உண்மையில் வேறுபாடு இல்லையென்றும், பல சமயங்களும் ஒரே கடவுளைப் பற்றி நிற்கின்றமையால் பல சமயங்களும் பெயரளவால் வெவ்வேறாகத் தோன்றினும் உண்மையில் ஒன்றேயென்றும் கண்டு பேரின்பம் அடைவார்கள். அது பற்றியே "எம்மதக் கடவுளும் தம்மதெனக் கொளல்" என்று கூறப்பட்டுள்ளது. இதனை யாவரும் கடைபிடித்து ஒழுகுவாராக.

கடவுள் துணை.

- 1935-ஆம் ஆண்டு
"குமரன்" இதழ் வருஷ அனுபந்தத்தில்

தமிழர் தலைவர் **வைகோ**
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி தி.மு.கழகம்

"1994இல் எழுதிய அணிந்துரையில்,

அவருக்கு நிகர் அவரே

– வைகோ

தமிழ்த்தாத்தா உ.வே.சா கால்கள் தேய கவின் தமிழகமெங்கும் நடந்து பழந்தமிழ் சுவடிகளைத் தேடிப்பாதுகாத்து பதிப்பித்துத் தந்தது போல இந்த இலட்சிய இளைஞனும் வரலாற்றின் சாட்சியங்களையும் குறிப்புகளையும் தேடித்தேடி சேகரித்து தன்னையே ஒரு கருத்துப்பெட்டகமாக செய்திக் களஞ்சியமாக ஆக்கிக்கொண்டார். நூல்களைப் படிப்பதில், பழந்தமிழர் வாழ்வு, விடுதலைப்போர் நிகழ்வு குறித்த செய்திகளைச் சேகரிப்பதில் அவருக்கு நிகர் அவரே".

பணியாற்றுவதில் அவர் ஒரு நடமாடும் கணினி (கம்ப்யூட்டர்).

ச.மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி
(தன்னாட்சி)
ரஹ்மத் நகர், திருநெல்வேலி

திவான் என்கிற தமிழ் 'வான்'

மறைக்கப்பட்ட மறக்கப்பட்ட வரலாறுகளுக்கிடையே தினமும்
தேடிப்பயணிக்கும் ஆய்வாளர் செ.திவான்,
என் நெஞ்சம் நிறைந்த தண்டமிழ்த் தேனீ.
நூறு நூல்கள் கண்ட பைந்தமிழ் ஆறு! அன்பு திவான்...
நம் இலக்கிய வான், உண்மை வரலாற்று வான்',
தேசத்தையும் மொழியையும் இருகண்களாய் என்றும்
தேடித்திரியும் ஒப்பற்ற தமிழ்வான்